மத்திய கலாசார நிதியத்தின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கை - 2024

மத்திய கலாசார நிதியத்தின் 2024 ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மீதான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) இன பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற நிதியத்தின் 2024 ஆண்டின் நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மீதான எனது அவதானிப்புக்கள் மாத்திரம் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிப்பது தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும். அச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாகரம், ஒவ்வொறு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டு சபையின் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்க முடியுமானவாறான காலஎல்லையினுள் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். அச் சட்டத்தின் 38 (1) (ஈ) பிரிவின் பிரகாரம், வருடாந்த அறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்களை தேவையான நேரத்திற்குள் தயாரிக்கப்படுவதனை உறுதி செய்ய வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பேற்க வேண்டும்.

1.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 15 பந்தி மூலம் திருத்திய நிதிப் பிரமாணம் 877 (2) (ஈ) பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களிற்குள் நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும், 2022 ஆண்டின் நிதிக்கூற்றுக்களை 2 வருடங்கள் 10 மாதங்கள் தாமதத்துடன் 2026 மார்ச் 19 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த போதும் 2023 மற்றும் 2024 ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்களை 2025 திசெம்பர் 31 திகதி வரையும் சமர்ப்பித்திருக்கவில்லை.	2022/2023 ஆண்டுகளின் கணக்குகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், 2024 ஆண்டின் இறுதிக் கணக்குகள் கட்டுப்பாடு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. 2025 ஆண்டின் இறுதிக் கணக்குகளையும் தயாரிக்க ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாக அறிவிக்கிறேன்.	சுற்றறிக்கை பிரகாரம் நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

1.3 சொத்துக்கள், பொறுப்புக்கள் வருமானம் மற்றும் செலவுகள்

நிதியத்தினால் இறுதியாக தயாரிக்கப்பட்ட 2021 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த அண்டிற்காக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள் வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் பின்வருமாறு

நிதிக்கூற்ற உருப்படி	பெறுமதி (ரூபா)
சொத்துக்கள்	
நடைமுறை சொத்துக்கள்	7,498,748,516
நடைமுறையல்லாத சொத்துக்கள்	1,135,546,001
மொத்த சொத்துக்கள்	8,634,294,518
பொறுப்புகள்	
நடைமுறை பொறுப்புக்கள்	267,233,287
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்	1,398,317,150
மொத்த பொறுப்புக்கள்	1,665,550,437
ஊரிமை மூலதனம்	6,968,744,081
மொத்த பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம்	8,634,294,518
மொத்த வருமானம்	1,472,651,552
மொத்த செலவு	1,491,643,175
பற்றாக்குறை	18,991,623

2. கணக்காய்வு அவதானிப்புக்கள்

2.1 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

	சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2016 திசெம்பர் 29 திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி	ஒவ்வொறு எரிபொருள் எரிவு பரிசோதனையின் 12 மாதங்களின் பின் அல்லது 25,000 கி.மீ தூரம் செலுத்திய பின் அல்லது பிரதான திருத்தத்தின் பின் எனும் விடயங்களில் முதலாவது இடம்பெறும் சந்தர்ப்பத்தின் பின் மீண்டும் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய போதும் நிதியத்திற்குரிய 172 வாகனங்களிற்கு எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை.	122 வாகனங்களிற்காக எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் நிறுவனத்தினால் வெற்றிகமாக பெரும்பாலும் செலுத்தப்படும் கார், வான், முச்சக்கரவண்டி, கெப் ஆகிய 30 அளவான வாகனங்களிற்கு எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உள்ளன. எஞ்சிய வாகனங்கின் எரிபொருள் எரிவு பரிசோதனை	சுற்றறிக்கை பிரகாரம் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.

			படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	
(ஆ)	2022 சனவரி 25 திகதிய இலக்கம் 04/2022 கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை	கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வாகன பதிவேட்டின் பிரகாரம் 2024 செப்டம்பர் மாதத்தில் வாகன ஏலவிற்பனையின் பின்னரும் 14 வாகனங்கள் ஏலவிற்பனை செய்யவுள்ள பழுதடைந்த நிலையில் நிலவுவதாக குறிப்பிடப்பட்டு இருந்தன. அவ்வாறாயினும் வாகன பாராதீன செயன்முறையை நிறைவு செய்ய 2024 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2024 ஆண்டு செப்டம்பர் மாத பெறுகைகள் மூலம் அத் திகதியன்று பழுதடைந்த நிலையில் காணப்பட்ட 07 வாகனங்கள் ஏலவிற்பனை செய்யப்பட்டுள்ளன. 2024 திசெம்பர் 31 திகதி அளவில் 14 வாகனங்கள் பழுதடைந்த நிலையில் காணப்படுவதுடன் அது தொடர்பாக பதிலில் குறிப்பிடப்படவில்லை.	பழுதடைந்த வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மத்திய கலாசார நிதியத்தின் மூலம் 2019 ஆண்டில் ரூபா 39,374,087 செலவில் பொலன்னருவையில், கொழும்பு மட்டக்களப்பு வீதிக்கு அருகில் நிர்மாணித்திருந்த 22 அறைகளுடன் கூடிய வியாபார நிலைய கட்டிடத் தொகுதியில் 3 கடையறைகளின் மூன்று குத்தகைதாரர்கள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அவ்வாறாயினும் அந்த குத்தகைதாரர்களினால் 2025 மார்ச் 06 திகதி வரை நிதியத்திற்கு எவ்வித குத்தகை தொகையையும் செலுத்தி இருக்காததுடன் இந்த காணியின் உடமை நிதியத்திற்கு இல்லாத காரணத்தால் சட்டபூர்வ குத்தகை உடன்படிக்கைக்கு உட்பட இயலாதிருந்தது. மேலும் எஞ்சிய 19 கடையறைகளும் 5 ஆண்டுகளிற்கு அதிக காலமாக விளைவற்று காணப்பட்டன.	தற்போது மத்திய கலாசார நிதியம் மற்றும் பிரதேச செயலகத்திற்கு இடையே பல சுற்று கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் மத்திய கலாசார நிதியத்திற்கு அரச காணிகளை நேரடியாக ஒப்படைக்க அதிகாரம் இல்லை எனில் அதனை வரிசை அமைச்சினால் மத்திய கலாசார நிதியத்திற்கு உடமையை ஒப்படைக்க முன்மொழியப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் உடமையை பெற்றுக் கொண்ட பின்னர் குறித்த தரப்பினருடன் உடன்படிக்கை செய்ய சட்டபூர்வ உரிமை கிடைப்பதுடன் அதன் பிரகாரம் குத்தகை வாடகை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்.	கட்டிடத்தை உரியவாறு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் கடையறைகளை குத்தகை வழங்கும் போது முறையாக உடன்படிக்கையின் மீது குத்தகை வழங்க வேண்டும்.
(ஆ)	பொலன்னருவை தொடர்பாக வெளியிடப்பட்ட அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக தகவல்கள் மற்றும் பழைய ஆவணப்படுத்தப்பட்ட தகவல்களை ஒன்று திரட்டும் ஆவணக் காப்பகமொன்று மற்றும் பாவனைக்கு தேவையான வசதிகளை வழங்கும் நோக்கில் பொலன்னருவை உரிமை முகாமைத்துவ	இந்த ஒப்பந்த பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட காரணமாக அமைந்தது. 2019 ஆண்ணடில் ஏற்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கொரோனா பேரழிவு காரணமாக மத்திய கலாசார நிதியம் பாரிய நிதி	காணியின் உரிமையை சுவீகரித்து நிர்மாணத்தை பூர்த்தி செய்து கொள்ள நடவடிக்கை

நிலையமொன்றை 180 நாட்களிற்குள் நிர்மாணிக்க மத்திய பொறியியலாளர் சேவை தனியார் கம்பனியுடன் ரூபா 38,926,902 மதிப்பீட்டுத் தொகைக்கு 2019 மார்ச் 20 திகதி உடன்படிக்கை செய்திருந்த போதும் பல்வேறு காரணங்களினால் 2020 ஜுன் 28 திகதி வரை காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. இந்த நிர்மாணத்திற்காக 2018 ஆண்டில் முற்பணமாக ரூபா 8,953,187 தொகை மற்றும் 2019 ஆண்டில் ரூபா 4,124,175 தொகையும் செலுத்தியிருந்த போதும் கட்டிட நிர்மாணப் பணிகள் இடைநடுவே **நிறு**த்தியிருந்த காரணத்தால் அந்த செலவு விளைவற்ற செலவாக இருந்ததுடன் இந்த நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த காணியின் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நெருக்கடிக்கு முகங்கொடுத்த காரணத்தினால் ஆகும். இந்த சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அனைத்து ஒப்பந்த பணிகளையும் மேற்கொண்டு செல்வது நிறுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பாக மத்திய பொறியியல் மதியுரை பணியகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	எடுக்க வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஸ்ரீ தலதா மாளிகையின் திரிபீடகம் அடங்கியுள்ள ஓலைப் பதிவுகளை இலத்திரமயமாக்கல் மற்றும் அறிக்கையிடலிற்காக 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் ரூபா 2,412,500 ஆன மதிப்பீட்டுத் தொகையின் ரூபா 1,258,750 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் அதற்கு தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை பெற்றுக் கொள்ளும் செயன்முறையை முதலில் முடிவு செய்து திட்டமிட்டிருக்காதமை மற்றும் தியவடன நிலமை அவர்கள் மற்றும் மகாநாயக தேரர்கள் அதற்கான இணக்கத்தை வழங்காத காரணத்தால் 2025 திசெம்பர் 31 திகதியளவிலும் திரிபீடகம் அடங்கிய ஓலைப் பதிவுகளை இலத்திரமயமாக்கல் எனும் பணியை நிறைவு செய்திருக்கவில்லை.	ஸ்ரீ தலதா மாளிகையின் திரிபீடகம் அடங்கியுள்ள ஓலைப் பதிவுகளை இலத்திரமயமாக்கல் மற்றும் அறிக்கையிடல் பணியை மேற்கொள்வதற்காக பாலி மொழியில் பாண்டித்தியம் பெற்ற அறிஞர்களின் சேவை தேவைப்பட்டதுடன் அதற்காக கண்டி செயற்திட்டத்தில் அவ்வாறான நிபுணர் ஒருவர் இருந்தார். அவரைக் கொண்டு இந்த பணியை நிறைவு செய்ய இருந்த போதும் குறித்த அலுவலர் ஓய்வுபெற்றதால் நிறுத்தப்பட்டது. இந்த பணியை நிறைவேற்றச் செல்லும் போது தியவடன நிலமை அவர்கள் மற்றும் மகாநாயக தேரர்கள் அதற்கான இணக்கப்பாட்டை வழங்கவில்லை. இணக்கப்பாட்டை வழங்காதமை நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட செயலாகையால் மேற்படி தாமதம் ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அதிக முயற்சி எடுத்து பிக்குகளை இணக்கப்படுத்தின் கொண்டு இப் பணியை தற்போது மேற்கொண்டு வரப்படுகின்றது.	பணிகளை திட்டமிடும் போது அதற்காக தேவையான வளங்களை பெற்றுக் கொள்வது தொடர்பாக முன்கூட்டிய திட்டம் இருக்க வேண்டியதுடன் குறித்த பணிகளை குறித்துரைத்த திட்டத்தின் கீழ் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ)	2024 ஆண்டில் சுற்றுலா வழிகாட்டி புத்தகத்தை தயாரிப்பதற்காக ரூபா 1,084,250 ஆன மதிப்பீட்டுத் தொகையில் தொழிலாளர் கிரயமாக ரூபா 26,300 தொகை அதாவது 3 சதவீத தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் திட்டமிட்ட பிரகாரம் அப் பணியை 2024 திசெம்பர் 31 திகதி வரையும் நிறைவு செய்ய நிதியத்திற்கு இயலாதிருந்தது.	2024 ஆண்டில் அப் பணிக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதும் இப்பணியை ஓரளவு மேற்கொண்டு தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. பேராசிரியர் நிஹல் த சில்வா அவர்களினால் இந்த புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளதால் மீண்டும் மேற்கொள்ள தேவை இல்லையென பிற்காலத்தில் உறுதியாகியுள்ளது. தற்போது பேராசிரியர் நிஹல் த சில்வா அவர்களினால் எழுதப்பட்ட புத்தகத்தின் நடவடிக்கைகள் கொழும்பில் அமைந்துள்ள அத்தபத்து அலுவலகத்தில் வெளியீட்டுப் பிரிவின் மூலம் மேற்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.	தேவைப்பாட்டை சரியாக உறுதி செய்து கொண்ட பின்னர் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும்.
(இ)	மத்திய கலாசார நிதியத்தினால் பொருட்களிற்காக ரூபா 43,942,030 செலவிட்டு இலங்கை இராணுவத்தின் ஊதியத்தை பெற்று 2019 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நெல்லிகல பௌத்த நிலையத்தின் ஓய்வு மண்டபத்தின் நிர்மாணத்தை 2020 ஆண்டில் இடைநடுவே நிறுத்தும் போது முன்னேற்றம் 40 சதவீதமாக இருந்தது. கணக்காய்வு திகதி 2025 திசெம்பர் 31 திகதியளவில் சுமார் 05 ஆண்டுகள் காலம் கடந்துள்ள போதும் அந்த ஓய்வு மண்டபத்தின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்திருக்கவில்லை.	இப் பணியை ஆரம்பித்திருந்த போதும் கொவிட் தொற்று நிலைமை மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் மத்திய கலாசார நிதியம் முகங்கொடுத்த நிதி நெருக்கடியின் முன் இப்பணி இடைநடுவே நிறுத்தப்பட்டது. இது தொடர்பாக கலந்துரையாடி அதனை தற்போது காணப்படுகின்றவாறு மகாநாயக தேரர்களிற்கு ஒப்படைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனினும் தலைமை பிக்குவினால் அதற்காக சாதகமான பதில் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக தொடர்ந்தும் தலைமை பிக்குகளுடன் கலந்துரையாடி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	ஓய்வு மண்டபத்தின் நிர்மாணம் தொடர்பாக தாமதமின்ற கலந்துரையாடி தீர்மானம் எடுக்க வேண்டும்.
(ஈ)	நெல்லிகல ஓய்வு மண்டபத்தை நிர்மாணிக்கும் பணிகளை நிறுத்தி சுமார் 05 ஆண்டுகள் கடந்துள்ள போதும், அந்த செயற்திட்டத்திற்காக ரூபா 10,354,638 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 11 நிர்மாண உபகரண உருப்படிகள் மற்றும் கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் மேலும் உபயோகத்தின் பின்னர் பயன்படுத்த முடியுமான நிலையிலுள்ள பண்டங்களை நிதியத்திற்கு சுவீகரிக்க அல்லது அவற்றை பாதுகாப்பாக	2025 ஜுலை 22 திகதி உள்ளக கணக்காய்வாளர் உள்ளடங்களாக மூவரைக் கொண்ட குழுவின் பங்குபற்றலுடன் வேலைத் தளத்தை பரீட்சித்து அதன் போது அங்கு காணப்பட்ட மற்றும் காணப்படாத பண்டங்கள் பற்றி பட்டியலொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த பட்டியலில் பண்டங்களை	ஓய்வு மண்டபத்தை நிர்மாணிக்க கொள்வனவு செய்த உபகரணங்கள் மற்றும் கணினி உதிரப்பாகங்கள் தொடர்பாக தாமதமின்றி கலந்துரையாடி

	பொறுப்பில் வைத்துக் கொள்ள நிதியத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	மகாநாயக தேரர்களிற்கு ஒப்படைக்க அல்லது செயற்திட்டத்திற்கு ஒப்படைக்க முன்மொழிந்த போதும் இதற்காக நாயக தேரரின் இணக்கப்பாடு இதுரை கிடைக்கவில்லை. அது தொடர்பாக முன்நடவடிக்கை எடுக்க நாயக தேரருடன் கலந்துரையாடப்படுகின்றது.	தீர்மானமொன்றை எடுக்க வேண்டும்.
(உ)	பொலன்னருவை அருங்காட்சியகத்தில் வாயு பதனாக்கி தொகுதியொன்றை பொருத்துவதற்காக 2024 பாதீட்டின் மூலம் ரூபா 30,000,000 தொகை ஒதுக்கியிருந்த போதும் அங்காட்சியகத்தினுள் வாயு பதனாக்கியை 2024 திசெம்பர் 31 திகதி வரை பொருத்தியிருக்காததால் சுற்றுலா பயணிகள் அசௌகரியங்களிற்கு உட்படுவதாக மற்றும் சுற்றலா பயணிகள் தொடர்ந்து அது தொடர்பாக முறைப்பாடு செய்வதாக சுவடிகள் காப்பக முறைபாட்டு பதிவேட்டை பரீட்சிக்கும் போது அவதானிக்கப்பட்டது.	அதன் போது பொருத்தியிருந்த வாயு பதனாக்கித் தொகுதியை பழுதுபார்த்தல் பொருளாதார ரீதியாக ஆக்கவூர்வமற்றதால் புதிய தொகுதியொன்றை பொருத்த முடிவு செய்யப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 30,000,000 தொகை போதாமையால் 2026 ஆண்டில் ரூபா 71,554,328 தொகை வேலைத் திட்டத்திற்கு உட்படுத்தி அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.	நிதி ஏற்பாட்டை கோரும் போது தேவையை சரியாக இனங்கண்டு அதற்காக போதியவாறு கோரிக்கை விடுக்க வேண்டியதுடன், விலை மாற்ற தாக்கம் ஏற்படாதவாறு குறித்த கால எல்லையினுள் பணியை நிறைவு செய்யவேண்டும்.
(ஊ)	2011 பெப்ரவரி 02 திகதிய இலக்கம் அப/11/0/169/55/004 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நிதியம் ஈட்டிய வருமானத்தில் 25 சதவீதத்தை தொல்பொருளியல் நிலையங்களை பராமரிப்பதற்காக தொல்பொருளியல் திணைக்களத்திற்கு வழங்க வேண்டிய போதும் 2019 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை 6 ஆண்டுகளிற்கு வழங்க வேண்டியதான கூட்டுத் தொகை ரூபா 3,233,773,978 அத்திணைக்களத்திற்கு வழங்கியிருக்கவில்லை.	இந்த ஆண்டுகளில் மத்திய கலாசார நிதியத்தில் கடுமையான செலவின கட்டுப்பாட்டை மேற்கொண்டு நடாத்திச் செல்லப்பட்டது. இக் காரணத்தால் அந்த ஆண்டுகளில் தொல்பொருளியல் திணைக்களத்தினால் மேற்கொண்ட கோரிக்கைகளின் பிரகாரம் 25 சதவீத பங்களிப்பு தொகையை வழங்க முடியாது இருந்துள்ளது. 2025 ஆம் ஆண்டில் தொல்பொருளியல் திணைக்களத்திற்கு 03 சந்தர்ப்பங்களில் ரூபா 177.7 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.	அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(எ)	ஸ்ரீ தலதா மாளிகைக்கு அருகில் அமைந்துள்ள தொல்பொருளியல் திணைக்களத்தினால் பாதுகாத்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கை மற்றும் பயன்பாட்டிற்காக நிதியத்திற்கு வழங்கியிருந்த சர்வதேச தகவல்	சர்வதேச தகவல் மத்திய நிலையமொன்றாக நடாத்திச் செல்ல பொறுப்பேற்ற இந்த கட்டிடம் 1991 ஆண்டு முதல் 2017 ஜுலை 23 திகதி வரை நடாத்திச் செல்லப்பட்டது. இக்	அமைச்சினால் இந்த கட்டிடத்தை மீளப் பெற்றுக் கொண்டு சட்டரீதியான உரிமை

	மத்திய நிலைய கட்டிடத்தை சனாதிபதி சிரேஷ்ட மேலதிக செயலாளரின் கோரிக்கை பிரகாரம் 2017 ஜுலை 23 முதல் 2017 ஆகஸ்ட் 16 திகதி வரையான காலத்திற்காக கண்டி ஸ்ரீ பத்தினி ஆலயத்தின் தேவைக்காக கையளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் அந்த கட்டிடத்தை மீண்டும் நிதியத்திற்கு பொறுப்பேற்க 2025 மே 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்காத காரணத்தால் இந்த கட்டிடத்தில் அமைந்துள்ள தகவல் மத்திய நிலையத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளிற்கு இலவசமாக தகவல்களை வழங்குதல், இலவசமாக செவிப்புல கட்புல நிகழ்சித் திட்டங்களை நடாத்துதல், கலாசாரம் மற்றும் பிணைக்கப்பட்ட புத்தகங்கள் மற்றும் ஞாபகார்த்த விற்பனைகளை செய்தல், இலங்கை கலாசாரம் மற்றும் பிணைக்கப்பட்ட கல்விசார் நிகழ்சித் திட்டங்களை நடாத்துதல் போன்ற சேவைகள் சுமார் 4 ½ வருட காலமாக வழங்க முடியாதிருந்தது. மேலும் குறித்த கட்டிடத்தில் காணப்படும் 05 மில்லியனிலும் அதிக நிதியத்தின் சொத்துக்களும் விளைவற்று மற்றும் குறை பயன்பாட்டுடன் நிலவின.	கட்டிடம் மத்திய கலாசார நிதியத்திற்கு சட்டரீதியான உரிமையற்ற கட்டிடமொன்றாகும். 2017 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரை இக் கட்டிடமானது ஸ்ரீ மகா பத்தினி ஆலயத்தின் 2017 ஆம் ஆண்டின் எசல பெரஹர நடவடிக்கைகளிற்காக தற்காலிகமாக பயன்படுத்த பத்தினி ஆலயத்தின் பஸ்நாயக நிலமை அவர்களிற்கு அமைச்சின் கட்டளை பிரகாரம் வழங்க நேர்ந்தது. இக் கட்டிடத்தின் திறப்பு கண்டி பத்தினி ஆலயத்தின் பஸ்நாயக நிலமை அவர்களினால் மீள் கையளிப்பதனை மறுப்பதுடன் அவ்வாறே அக் கட்டிடத்தினுள் மத்திய கலாசார நிதியத்திற்கு உரிய ஆதனங்கள் காணப்படுகின்றன. அப் பண்டங்களின் ஒரு பகுதி மீண்டும் மத்திய கலாசார நிதியத்திற்கு பெறப்பட்டுள்ளது.	தொடர்பாக காணப்படும் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள மற்றும் மத்திய நிலையத்தினால் வழங்கிய சேவைகளை பொது மக்களிற்கு வழங்க நடவடிக்கை திட்டமிடுவது உரிய தரப்பினரின் பொறுப்பாகுமென .
(ஏ)	பலவீனமான பாறைகளை கொண்டு பூர்த்தி செய்யப்பட்ட புத்தர் சிலை மழை வெயிலிற்குட்பட்டு இருந்ததால் பௌதீக மற்றும் இரசாயன சேதத்திற்குட்பட்டு பலவீனமான நிலைக்கு உட்பட்டிருந்ததுடன் புத்தர் சிலைக்காக கூரையொன்றை நிர்மாணிக்க முக்கிய கவனம் செலுத்துமாறு அறிவித்து கலாசார அமைச்சினால் மத்திய கலாசார நிதியத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தொல்பொருளியில் திணைக்களத்திடம் பெற்றுக் கொண்ட அங்கீகாரத்தின் பின்னர் 2019 நவம்பர் 04 திகதி புத்தர் சிலைக்காக கூரையொன்றை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தை பெறுகைகள் நடைமுறையின் பின்னர் எழுத்துமூல உடன்படிக்கை இன்றி ரூபா 1,941,433 பெறுமதிக்கு 150 நாட்களினுள் பூர்த்தி செய்ய நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், கணக்காய்வு திகதிய 2024 ஒக்டோபர் 06 திகதி வரையும் ரூபா 874,019 தொகை பெறுமதியான பட்டியல்கள்	கொவிட் தொற்று மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக நிதி நிலைமை பாதகமானதன் மீது இந்த நடவடிக்கை தாமதமாகியுள்ளது. அதனுடன் நிதி நிலைமை சாதகமான பின்னர் இதன் எஞ்சிய நடவடிக்கைகளிற்காக செயற்பட்டுள்ளதுடன் இலக்கம் 224 மார்ச் 04 கட்டுப்பாட்டுச் சபை அங்கீகாரம் பிரகாரம் ஒப்பந்ததாரர் மேற்கொண்டுள்ள பணிகளின் பட்டியலிற்கு கொடுப்பனவு செய்து ஒப்பந்தத்தை நிறைவு செய்யவும் பொறியியல் மதியுரை பெற்றுக் கொண்டு உத்தேச கூறையின் திடடத்தை திருத்தி நிர்மாணித்தலும் 2026 ஆண்டில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	தோல்பொருளியல் நிலைவுச் சின்னங்களை பாதுகாக்க மற்றும் பராமரிக்க முன்னுரிமை மற்றும் துரித செயற்பாடுகளை எடுக்க வேண்டும்.

	சமர்ப்பிக்கப்பட்டு இருந்த போதும் ஒப்பந்தத்திற்காக உடன்படிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படாததால் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாததன் மீது நிர்மாணப் பணிகள் முழுமையாக இடைநிறுத்தப்பட்டு 4 ½ ஆண்டுகள் கடந்திருந்தன.		
(ஐ)	சிசு தஹம் செவன மூன்றாம் கட்டத்தின் தொகுதி A இன் கீழ் 16 அறநெறிப் பாடசாலை கட்டிடங்கள் தொகுதி b இன் கீழ் 06 அறநெறிப் பாடசாலை கட்டிடங்கள் மற்றும் தொகுதி c இன் கீழ் 04 அறநெறிப் பாடசாலை கட்டிடங்கள் ஆக 26 அறநெறிப் பாடசாலை கட்டிடங்களை நிர்மாணிக்க 2019 ஒக்டோபர் 31 திகதி வேலைகளை நிறைவு செய்யும் அடிப்படையில் இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் நிதியத்திற்கு இடையே திகதி மற்றும் பெறுமதியின்றி புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2024 ஜுன் 30 திகதி வரையும் அந்த கட்டிட நிர்மாணங்களின் பௌதீக முன்னேற்றம் 65 சதவீதம் மாத்திரம் ஆனதுடன், இப் பணிக்காக நிதியத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு முற்பணமாக ரூபா 33,600,000 ஆன தொகையை 2019 செப்டம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் செலுத்தியிருந்த போதும் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொண்டிருக்கவில்லை.	சிசு தஹம் செவன III கட்டத்தின் தொகுதி A இன் கீழ் இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு 16 அறநெறி பாடசாலை கட்டிடங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. 2019 ஒக்டோபர் 30 இன் பின்னர் இந்த நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிர்மாணம் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பதிப்பிற்குறிய பிரதம மந்திரி அவர்களின் தலைமையில் புலனாய்வொன்றை மேற்கொள்ள அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பித்து மூவரைக் கொண்ட புலனாய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. தற்போது புலனாய்வு நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதுடன எமது நிறுவனத்திற்கு புலனாய்வு அறிக்கை கிடைக்கவில்லை. இந்த புலனாய்வு அறிகையின் வழங்கப்படும் பரிந்துரை பிரகாரம் மற்றும் கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கும் கட்டளையின் மீது இந்த நிர்மாணம் தொடர்பாக முன் நடவடிக்கை எடுக்கப்படும்.	புலனாய்வு அறிக்கையை தாமதமின்றி பெற்றுக் கொண்டு அதன் பரிந்துரை பிரகாரம் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஒ)	சிசு தஹம் செவன மூன்றாம் கட்டத்தின் தொகுதி A இன் கீழ் 28 அறநெறிப் பாடசாலை கட்டிடங்கள் தொகுதி b இன் கீழ் 32 அறநெறிப் பாடசாலை கட்டிடங்கள் மற்றும் தொகுதி c இன் கீழ் 28 அறநெறிப் பாடசாலை கட்டிடங்கள் ஆக 88 அறநெறிப் பாடசாலை கட்டிடங்களை நிர்மாணிக்க 2019 ஒக்டோபர் 31 திகதி வேலைகளை நிறைவு செய்யும் அடிப்படையில் அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக்	2020 இற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் மற்றும் ஏனைய கலாசார செயற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு தொடர்பாக விடயங்களை கண்டறிய அமைச்சரவையினால் மூவரைக் கொண்ட குழுவொன்றை நியமித்து செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது	புலனாய்வு அறிக்கையை தாமதமின்றி பெற்றுக் கொண்டு அதன் பரிந்துரை பிரகாரம் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	கூட்டுத்தாபனத்திற்கும் நிதியத்திற்கும் இடையே திகதி மற்றும் பெறுமதியின்றி புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. இருப்பினும் 2024 ஜுன் 30 வரையும் அவற்றில் 20 அறநெறிப் பாடசாலை கட்டிடங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கவில்லை. வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த 68 அறநெறிப் பாடசாலை கட்டிடங்களின் பௌதீக முன்னேற்றம் 10 இற்கும் 23 தசவீதத்திற்கும் இடையிலானது. எவ்வாறாயினும் இந்த அறநெறிப் பாடசாலை கட்டிடங்களை நிர்மாணிக்க முற்பணமாக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 21,800,000 தொகையை நிதியத்தினால் 2019 செப்டம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் செலுத்தியிருந்த போதும் வேலைகளை நிறைவு செய்து கொள்ள கட்டுப்பாட்டுச் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அந்த புலனாய்வு நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ள போதும் மத்திய கலாசார நிதியத்திற்கு புலனாய்வு அறிக்கை கிடைக்காததுடன் புலனாய்வு அறிகையினை அடிப்படையாகக் கொண்டு கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கும் அறிவுரை பிரகாரம் இந்த அறநெறி பாடசாலை கட்டிடங்களை நிர்மாணப்பது தொடர்பாக முன் நடவடிக்கை எடுக்கப்படும்.	
(ஒ)	நிதியத்தின் ரூபா 100,000,000 ஆன தொகையை முதலீடு செய்வது தொடர்பாக கொள்ளுப்பிடிய இலங்கை வங்கி பிரதான முகாமையாளரினால் அனுப்பியிருந்த கடிதத்தில் குறிப்பிடப்படும் வட்டி விகிதத்தை போலியாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக புலனாய்வொன்றை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்காண 2025 திசெம்பர் 31 திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	மேற்குறித்த சம்பவம் தொடர்பாக நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வாளரினால் விசாரணை மேற்கொண்டு 2024 மார்ச் 06 திகதி அவரின் கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். பின்னர் எதிர்காலத்தில் பக்கச்சார்பற்ற மற்றும் நியாயமான முறையில் புலனாய்வொன்றை மேற்கொள்ள அமைச்சிற்கு 2024 ஏப்ரல் 30 திகதிய கடிதம் மூலம் ஆரம்ப புலனாய்வு விசாரணையை மேற்கொள்ளமாறு கோரிக்கை விடப்பட்டிருந்தது. நிறுவன ஒழுக்காற்று பணி ஒழுங்கின் பிரகாரம் உள்ளக புலனாய்வு ஒன்றை ஆரம்பிக் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	புலனாய்வை துரிதமாக நிறைவு செய்து பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்.

	கணக்காய்வு அவதானிப்பு	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	மத்திய கலாசார நிதியத்தின் அபிவிருத்தி செயற்பாடுகள் கட்டிடக் கலை பாதுகாத்தல், சுவரோவியங்களை பாதுகாத்தல், தொல்பொருளியல் ஆராய்ச்சி அகழ்வு நடவடிக்கைகள் மற்றும் அருங்காட்சியக பாதுகாத்தல்	செயற்திட்டங்களை தெரிவு செய்வதற்கான பணி ஒழுங்கு பின்வருமாறு. 1. பணம் ஈட்டும் அநுராதபுரம், சீகரிய, மொனராகல, யாழ்பாணம், பொலன்னருவை ஆகிய இடங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் ஒரு பகுதியை	செயற்திட்டங்களை தெரிவு செய்வது தொடர்பாக முறையான பிரமாணங்களுடன் எழுத்துமூல வழிகாட்டியை

	நடவடிக்கைகள் எனும் 04 பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்காக செயற்திட்டங்களை தெரிவு செய்தல், அங்கீகாரத்தை பெறல் மற்றும் செயற்படுத்துவது தொடர்பாக அங்கீகார பணி ஒழுங்கொன்று அல்லது வழிகாட்டிக் கோவையொன்றை அறிமுகம் செய்திருக்கவில்லை.	தொல்பொருளியல் மற்றும் பாதுகாத்தல் பணிகளிற்காக ஈடுபடுத்தப்படும். 2. அநுராதபுரம், சீகரிய, தபுள்ள, காலி மற்றும் கண்டி ஆகிய அருங்காட்சியகங்களின் நிலையை உயர் மட்டத்தில் பராமரித்து செல்லல். 3. வடமேல், ஊவா, மாதறை, திஸ்ஸமஹாராம, ரம்பா விகாரை போன்ற தேசிய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த தொல் பொருளியல் நடவடிக்கைகள். 4. அதற்கு மேலதிகமாக இலங்கையில் வேறு பிரதேசங்களிலிருந்து கிடைக்கும் கோரிக்கைகளில் இருந்து மிக விரைவில் தலையீடு செய்ய வேண்டிய இடங்கள், ஆகையால் மேற்குறித்த வழிகாட்டியை பயன்படுத்தி கட்டுப்பாட்டுச் சபை அங்கீகாரத்தை பெற்று செயற்படுவது மத்திய கலாசார நிதியத்தின் சாதாரண பணி ஒழுங்காகும்.	பேணிக் கொள்ள வேண்டும்.
(ஆ)	மத்திய கலாசார நிதியத்தின் கண்டி செயற்திட்ட அலுவலகத்தின் 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் திட்டமிடப்பட்ட 07 பணிகளின் பௌதீக முன்னேற்றம் 03 சதவீதத்திலிருந்து 59 சதவீதம் வரையான குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் கடலாதெனிய விஜயோத்பாய சிறிய விகாரைக்கான கூரை பாதுகாத்தல் பணியின் முன்னேற்றம் பூச்சியம் என அவதானிக்கப்பட்டது.	கண்டி செயற்திட்டத்தின் வழிகாட்டி புத்தகைத்தை தயாரிக்கும் பணியின் ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு எஞ்சிய பணிகளிற்காக போக்குவரத்து வசதிகளை பெற்றுக் கொள்ள முடியாது போனதால் மேற்கொள்ள முடியவில்லை. கடலாதெனிய விஜயோத்பாய சிறிய விகாரைக்கான கூரை பாதுகாத்தல் பணி தொல்பொருளியல் திணைக்களத்தினால் வழங்கிய திட்டங்களின் பிரச்சினைக்குரிய நிலைமை காரணமாக முன்னேற்றம் முறைந்துள்ளது. தலதா மாளிகை வளவில் ஓவியங்கள் பற்றிய அறிக்கை வழங்கல் எமது நிறுவனத்திற்கு சொந்தமான வேலைத்தளம் அல்லாததால் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மகாநாயக தேரர்களின் மற்றும் தியவடன நிலமே அவர்களின் அனுமதியின் பிரகாரம் இடம்பெற வேண்டும். உச்ச பாதுகாப்பு வலையத்தில் அமைந்துள்ளதாலும் மேற்பார்வை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதால் இலக்கு	வளங்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் சட்ட நிலைமை தொடர்பாக கவனத்திற் கொண்டு திட்டத்தை தயாரிக்க வேண்டும்.

		வைத்த அளவை அடைந்து கொள்ள முடியாதென அறிவிக்கப்பட்டுள்ளது.	
(இ)	கட்டிடக் கலை நினைவுச் சின்ன பாதுகாத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பெறுமதியான அரியவகை பலகைக் கூரைகள், செதுக்கப்பட்ட மரத் தூண்கள் உள்ளிட்ட நினைவுச் சின்னங்களின் பாதுகாத்தல் நடவடிக்கைகளின் போது முன்னர் பயன்படுத்தியிருந்த பெறுமதியான மரங்கள் மற்றும் ஏனைய பொருட்களிலிருந்து பயன்படுத்த முடியுமான பொருட்களை மீண்டும் பயன்படுத்தி சிதைவடைந்த சேதமடைந்த மரங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் அகற்றப்பட்டிருந்தன. எனினும் செயற்திட்ட தளத்தை பொறுப்பேற்கும் போது, நிதியத்திற்கு பொறுப்பேற்கும் பெறுமதிமிக்க பலகை மற்றும் பொருட்களின் விபரங்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடொன்று மற்றும் பாதுகாத்தல் செயற்பாடுகளின் போது அகற்றப்படும் அல்லது வேலைத் தளங்களின் உரிமையிற்கு மீள் ஒப்படைக்கப்படும் பலகை மற்றும் பொருட்கள் தொடர்பான விபரங்கள் உள்ளடங்கிய பொருட் பதிவேடு ஒன்றை பேணிச் சென்றிருக்கவில்லை.	பாதுகாத்தலின் போது நினைவுச் சின்னங்களிலிருந்து அகற்றப்படும் பலகை போன்றவைகள் அநேகமாக மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்ட பின்னர் உரியவாறு அறிவிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அக் கடிதத்தின் பிரதியொன்றை தயவுடன் இத்துடன் சமர்ப்பிக்கிறேன். எவ்வாறாயினும் இது தொடர்பாக முறையான அறிவுரை கோவையொன்று செயற்திட்ட முகாமையாளர்கள், நிலைய பொறுப்பதிகாரிகள், கணக்கு அலுவலர்கள் மற்றும் வேலைத்தள அலுவலர்களிற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.	வேலைத் தளங்களிலிருந்து அகற்றப்படும் பொருட்கள் மற்றும் உபகரணங்களிற்காக சரியான ஆவணப்படுத்தப்பட்ட முறைமை ஒன்றை செயற்படுத்த வேண்டும்.
(ஈ)	செயற்திட்டங்களின் இருப்புக் களஞ்சியத்தினால் பொது இருப்பு புத்தகத்திலிருந்து ஒவ்வொறு வேலைத் தளங்களிற்கும் பொருட்களை விநியோகித்த போதும் ஒவ்வொரு வேலைத் தளங்களிற்கும் வெவ்வேறான இருப்பு புத்தகங்களை அல்லது ஆவணங்களை பேணிச் சென்றிருக்கவில்லை.	வேலைத் தளங்களிற்கு பொருட்களை விநியோகிக்கும் போது இருப்பு புத்தகங்களில் உள்ளடக்கப்பட்ட உடனே ஒவ்வொரு வேலைத் தளங்களிற்கும் வெவ்வேறாக பதிவேடுகளை பேணிச் செல்வதற்காக அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.	ஒவ்வொரு வேலைத் தளங்களிலும் பொருட்களை உள்ளடக்குவதற்காக வெவ்வேறாக பதிவேடுகளை பேணிக் கொள்ள வேண்டும்.
(உ)	தபுள்ள சுவரோவிய அருங்காட்சியகத்தின் கூரை திருத்த வேலைகளை 2024	சுவரோவிய செயற்திட்ட முகாமையாளர்களின் மற்றும் கணக்கு அலுவலர்களின் முழுநேர	களஞ்சிய நிருவாகம் உரிய முறைமை

	மார்ச் மாதத்தில ஆரம்பித்து ஜுன் அளவில் நிறைவு செய்ததாக செலவு அறிக்கை மற்றும் மாதாந்த முன்னேற்ற அறிக்கை பிரகாரம் குறிப்பிடப்பட்டு இருந்தது. அதற்காக குறித்த பொருட்களை பயன்படுத்தி 02 மாதாங்கள் கடந்த பின்னர் பொருட்கள் விண்ணப்பப் பத்திரம் அதாவது 2024 மே 03 திகதி களஞ்சியத்திற்கு ஒப்படைந்திருந்ததுடன் அந்த பொருட்கள் விண்ணப்பப் பத்திரங்களில் களஞ்சியத்தில் இருந்து பொருட்களை வினியோகித்த அளவுகளை குறித்திருக்காமை மற்றும் வினியோகித்த பொருட்கள் அளவை பயன்பாட்டிற்கு எடுத்திருக்காததுடன் கணக்காய்வு திகதி 2025 சனவரி 27 வரை பணி நிறைவடைந்து சுமார் 7 மாத காலம் கடந்துள்ள போதும் எஞ்சிய பொருட்களை களஞ்சியத்திற்கு ஒப்படைக்காத காரணத்தால் இருப்பு பதிவேடுகளிற்கும் எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	மேற்பார்வையின் கீழ் செயற்திட்ட களஞ்யம் நடாத்திச் செல்லப்படல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பொதுவான அறிவுரை கோவையொன்றை செயற்திட்டத்திற்கு விநியோகித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க அனைத்து அலுவலர்களும் அறிவூட்டப்பட்டுள்ளனர். அவ்வாறு உரிய முறைமையிற்கு மாற்றமாக செயற்படும் சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்படும் போது அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.	பிரகாரம் இடம்பெற வேண்டியதுடன் குறித்த ஆவணப்படுத்தல் சரியாக மற்றும் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஊ)	சீகரிய செயற்திட்டத்திற்காக மதிப்பீடு தயாரித்து ஆரம்ப சந்தர்ப்பத்திலே குறித்த வேலைத்தளத்திற்காக பொருட்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் அவ்வாறு கொள்வனவு செய்த பொருட்கள் மற்றும் உபகரணங்கள் 2021 ஆண்டு முதல் இதுவரை இருப்பு களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்பட்டு வருவதாக அவதானிக்கப்பட்டது. கணக்காய்வு திகதிய 2025 பெப்ரவரி 05 திகதி வரை கூட்டுத் தொகை ரூபா 2,561,900 ஆன கட்டிடப் பொருட்கள், நீர் குழாய் உபகரணங்கள், மின் உபரகணங்கள், இரும்புப் பொருட்கள் மற்றும் வேறு பொருட்களின் இருப்பு மெதுவாக வெளியேற்றப்பட்டு கொண்டிருந்தன. இவ்வாறு	2024 வருடாந்த இருப்புக் கணிப்பீட்டு அறிக்கைகளில் உள்ளடங்கும் ரூபா 2.5 மில்லியன் பெருமானம் கொண்ட அனைத்து இருப்புக்களும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா கவர்ச்சியான உலக மரபுரிமை தொல்பொருளியல் வளவொன்றான சீகிரிய செயற்திட்டத்தின் பொது வசதிகளை வழங்க மற்றும் அன்றாட நடவடிக்கைகளை பராமரித்துச் செல்வதற்காக அத்தியசிய இருப்பு உருபடிகளாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.	தேவை பிரகாரம் இருப்புக்களை சேகரித்து விரயத்தை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நிலவுவதனுள் காலாவதியாகி பயன்படுத்த முடியாத இருப்புக்களும் இருக்க முடியமென அவதானிக்கப்பட்டது.		

3.4 பெறுகைகள் முகாமைத்துவம்.

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆண்டிற்காக பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டு வருடம் ஆரம்பிக்க முன்னர் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும் அதற்காக வருடம் ஆரம்பித்து 06 மாதங்கள் கடந்த பின்னர் அதாவது 2024 ஜுன் 18 திகதி கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரம் பெறப்பட்டு இருந்தது. மேலும் 2024 ஆண்டிற்காக பெறுகைகள் திட்டத்திற்குரிய 2024 திசெம்பர் 31 திகதிக்கு முன்னேற்ற அறிக்கையை தயாரித்திருக்கவில்லை.	2024 பெறுகைகள் திட்டம் கட்டுப்பாட்டு சபைக்கு ஆண்டின் முதலாம் கூட்டம் ஆன 2024 மார்ச் 21 திகதி கட்டுப்பாட்டு சபை பத்திர இலக்கம் 218 இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும், அத்திகதி அது கலந்துரையாடலிற்கு எடுக்கப்படவில்லை. அதன் பின்னர் 2025 மே 17 திகதி நடைபெற்ற கட்டுப்பாட்டு சபை மூலம் பத்திர இலக்கம் 219 இன் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு கட்டுப்பாட்டு சபை ஒன்று கூடியதானது மேற்குறிப்பிட்ட திகதிகளிலாகும்.	சுற்றறிக்கை பிரகாரம் உரிய காலத்தினுள் பெறுகைகள் திட்டத்தை தயாரித்து அங்கீகாத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும் திட்டத்திற்குரிய முன்னேற்றத்தையும் தயாரிக்க வேண்டும்.

4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 877 (உ) பந்தி பிரகாரம் அனைத்து கணக்கீட்டு உத்தியோகத்தர்களினாலும், நிதியத்தின் நிதி அறிக்கை மற்றும் செயலாற்றுகை அறிக்கையை கணக்காய்வு செய்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கும் கணக்காய்வு அறிக்கையையும் உள்ளடக்கி வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை	2018 ஆண்டின் வருடாந்த அறிக்கை ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டு அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அது மொழி பெயர்ப்பு நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது. 2019 ஆண்டின் வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதனை இந்த மாத இறுதியில் பூர்த்தி செய்து அமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்ப முடியமென அறிவிக்கப்பட்டுள்ளது.	நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்கள் நிறைவடைய முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

	நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்கள் நிறைவடைய முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய போதும் 2018 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் உள்ளடங்கிய செயலாற்றுகை அறிக்கை 2026 பெப்ரவரி 28 திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை.		

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	7406 – உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி (ஒப்பந்த அடிப்படையின் மீது) மற்றும் 7407 பாதுகாத்தல் (ஒப்பந்த அடிப்படைக்காக) எனும் பேரேட்டு குறியீடின் கீழ் 2024 ஆண்டில் முறையே ரூபா 100,000,000 மற்றும் ரூபா 400,000,000 ஒதுக்கப்பட்டிருந்த போதும் 7406 பேரேட்டு குறியீடின் கீழ் எந்தவித செலவும் செய்யப்பட்டிருக்காததுடன் ரூபா 400,000,000 ஆன பேரேட்டு குறியீடிலிருந்து ரூபா 18,790,822 தொகை அதாவது 4 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த பேரேட்டு குறியீட்டிற்காக மிகை மதிப்பீடு தயாரித்துள்ளதாக அவதானிக்கப்படுவதுடன் 2024 பாதீட்டின் மூலம் 14 பேரேட்டு கணக்குகளிற்காக ரூபா 174,600,000 ஒதுக்கப்பட்டுள்ள போதும் 2024 ஆண்டினுள் எந்தவித செலவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	நிதிஏற்பாடு ஒதுக்கிய போதும் செலவிடப்படாத செலவினத் தலைப்பிற்காக செயற்திட்ட மற்றும் தலைமை அலுவலக பிரிவினால் செலவின மதிப்பீடு சமர்ப்பித்த காரணத்தால் இந்த பேரேட்டு குறியீட்டிற்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இது தொடர்பாக அனைத்து செயற்திட்டங்கள் மற்றும் தலைமை அலுவலக பிரிவுகளை அறிவுருத்தி வருடாந்த பாதீட்டை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	உண்மையான செலவுகளை அடிப்படையாகக் கொண்டு தேவைப்பாட்டை கவனத்தில் எழுத்து மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	2024 ஆண்டினுள் நிதியத்தின் செயற்திட்டங்களில் தொல்பொருளியல் ஆராய்ச்சி அகழ்வு நடவடிக்கைகள், பாதுகாத்தல் நடவடிக்கைகள், அருங்காட்சியகங்கள் மற்றும் தொல்பொருளியல் தளங்களை பராமரிக்க முதற்கட்டமாக ரூபா 751,985,727 தொகை மதிப்பிடப்பட்டு இருந்த போதும் ஆண்டினுள் அதனை ரூபா 745,696,253 வரை குறைத்து திருத்தப்பட்டிருந்தது. இவ்வாறு 2022, 2023 ஆண்டுகளிலும்	2024 ஆண்டிற்கான முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டதானது 2023 ஆண்டில் ஆகும். செயற்திட்டங்களின் முன்மொழிவு தயாரிக்கப்படுவது செயற்திட்ட தேவைப்பாட்டை அடிப்படையாக்க கொண்டாகும். அங்கு அப் பணியை மேற்கொள்ள ஊதிய வளத்தை பெற்றுக் கொள்ள எதிர்பார்த்த போதும் பல்வேறு காரணங்களால் மனித ஊதியத்தை பெற்றுக் கொள்வதில்	செயற் திட்டத்திற்காக மதிப்பீடு தயாரிக்கும் போது நிலவுகின்ற ஏற்றுக் கொண்ட மற்றும் தேவையான வளங்கள் தொடர்பாக திட்டம் தயாரிக்க வேண்டும்.

	மதிப்பீடு தயாரித்த பின்னர் திருத்திய மதிப்பீட்டை தயாரித்துள்ளதாக அவதானிக்கப்பட்டதுடன் மேலும் திருத்திய மதிப்பீட்டின் உண்மையான வேலை பெறுமதி ரூபா 362,654,422 ஆனதுடன் அதன் முன்னேற்றத்தை நிதி மதிப்பீட்டுடன் இணக்கம் செய்கையில் 52 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. அதன் பிரகாரம் தற்போதைய நிலைமையை அடிப்படையாக்க கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும் 2024 ஆண்டினுள் மேற்கொள்ள எதிர்பார்த்த மொனராகல மற்றும் மட்டக்களப்பு செயற்திட்டங்களின் முன்னேற்றம் 50 சதவீதத்திலும் குறைந்த மட்டத்தில் நிலவின.	இடர் ஏற்பட்டது. 2024 ஆண்டு இறுதியளவில் இந்த இடரை தவிர்த்துக் கொண்டு அத்தியவசிய பணிகளிற்காக மாவட்ட விலை அடிப்படையின் கீழ் ஊழியர்களை வழங்கியுள்ளதுடன், தவறிய பல பணிகளை மேற்கொள்ள முடியுமாகியுள்ளது.	
(இ)	வெலிஹிந்த ஸ்ரீ சுதர்சநாராமய சுவரோவிய பாதுகாத்திற்கான ஆரம்ப மதிப்பீட்டின் பிரகாரம் 1285 மனித நாட்கள், திருத்திய மதிப்பீட்டின் பிரகாரம் 768 மனித நாட்கள் மற்றும் உண்மையாக செலவிட்டிருந்த மனித நாட்கள் அளவு 621 ஆகும். அதன் பிரகாரம் ஆரம்ப மதிப்பீட்டில் குறிப்பிடப்படும் மனித நாட்களின் சுமார் 50 சதவீதம் அளவான மனித நாட்கள் மாத்திரம் ஆண்டினுள் உண்மையாக பயன்படுத்த உள்ளதால் செயற்திட்டத்திற்காக மிகை மதிப்பீடு தயாரித்து பாரிய காலத்திற்கு செயற்திட்டம் திட்டமிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தை நிறைவு செய்ய மேலதிக காலத்தை கடத்துவதற்காக செயற்திட்ட காலத்தை அசாதாரணமாக நீடித்து இருந்ததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	கணக்காய்வு ஐயவினாவினால் சுட்டிக் காட்டியுள்ளவாறு மதிப்பீட்டை சரியாக தயாரிக்க எச்சரித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இந்த மதிப்பீட்டை திருத்திய பின்னர் பௌதீக முன்னேற்றம் 99 சதவீதம் மற்றும் நிதி முன்னேற்றம் 62 சதவீதமாக அறிக்கையிடப்பட்டுள்ளது.	உண்மையாக செலவாகும் நாட்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும்.

05. மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதியத்தின் சிரேஷ்ட நிறைவேற்று மட்டத்தில் 7 பதவிகள் ஒப்பந்த, இரட்டை நிலை மற்றும் பதிற்கடமை அடிப்படையின் மீது பணியில் ஈடுபடுத்திய காரணத்தால் நிதியத்தின் நோக்கத்தை அடைந்து கொள்ள	முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் தேவையான ஊழிர்களை அங்கீகரித்த பின்னர் எங்களால் வெற்றிடத்துடன் கூடிய உயர் பதவிகளிற்கு	ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு அமைய அலுவலர்களை ஆட்சேர்க்க வேண்டும்.

	மற்றும் நீண்ட கால திட்டத்துடன் கூடியதாக நிதியத்தை செயற்படுத்த தடையாக அமைய முடியுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	ஆட்சேர்ப்பதற்காக 2025 திசெம்பர் 15 திகதி பத்திரிகை அறிவித்தல் வெளியிட்டு விண்ணப்பம் கோரியுள்ளதுடன், கிட்டிய திகதியில் அந்த பதவிகளிற்காக நிரந்தர அலுவலர்களாக வெற்றிடங்களை நிரப்ப சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.	
(ஆ)	நீண்ட காலமாக ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை ஆட்சேர்த்து செயற்படுவதால் குறித்த ஊழியர்களால் பதவியில் கடமை மேவுகை மாத்திரம் செய்வதுடன் குறித்த பதவியின் விடய நடவடிக்கைகள் தொடர்பாக பொறுப்பேற்பு இடம்பெறாததுடன் தற்போது தலைமை அலுவலகத்தில் அவ்வாறு 41 அலுவலர்கள் கடமை மேவுகையினை மேற்கொள்வதாக அவதானிக்கப்பட்டது.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் நிறுவனத்திற்கு தேவையான ஊழியர் எண்ணிக்கையை கோரியிருந்த போதும் அவர்களினால் அங்கீகரித்திருக்கவில்லை. அதன் காரணத்தால் நிறுவனத்தில் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்ல ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை ஈடுபடுத்த நேர்ந்தது.	ஒப்பந்த பதவிகளிற்கு உரிய விடயங்கள் தொடர்பாக பொறுப்பேற்க வேண்டிய அலுவலர்கள் தீர்மானிக்க வேண்டும்.
(இ)	நிதியத்தின் கீழ் 26 செயற்திட்டங்கள் நடைமுறையான போதும் அந்த ஒவ்வொறு செயற்திட்டங்களிற்கு தேவையான ஊழியர் எண்ணிக்கையை தீர்மானித்திருக்காததுடன் அங்கீகார ஆளணியொன்று இல்லாதுள்ள காரணத்தால் செயற்திட்டங்களில் ஆளணி மிகை மற்றும் பற்றாக்குறையை இனங்காண முடியாததென அவதானிக்கப்பட்டது.	எங்களால் செயற்திட்டங்களிற்கு உரிய ஆளணி தீர்மானிக்கப்பட்டு இருந்த போதும் அரச ஊழியர்களை ஆட்சேர்ப்பது தற்காலிகமாக சில காலமாக நிறுத்தியிருந்ததால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் நிறுவனத்திற்கு தேவையான ஊழியர் எண்ணிக்கையை கோரியிருந்த போதும் அவர்களினால் அங்கீகரிக்கவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.	பிராந்திய அலுவலகங்களின் பணிகளை கவனத்திற் கொண்டு தேவையான பதவி மற்றும் அலுவலர் எண்ணிக்கையை தீர்மானிக்க வேண்டும்.